# நெல் பயிரில் இலைச்சுருட்டுப்புழு தாக்குதலின் அறிகுறிகள் மற்றும் அதன் கட்டுப்பாட்டு முறைகள்



# தாக்குதலின் அறிகுறிகள்



- இலைகளை இலைசுருட்டு புழுக்கள் நீளவாக்கில் மடக்கி கொண்டு அவற்றிலுள்ள பச்சையத்தை சுரண்டி உண்பதால் இலைகள் வெண்மை நிறமாக மாறிவிடும்.
- தீவிர தாக்குதலின்போது முழு நெல் வயலும் வெண்மையான நிறத்தில் காய்ந்ததுபோல் காட்சியளிக்கும்.
- இதன் தாக்குதல் வயல் ஓரங்களில் நிழலான பகுதிகளிலும் அதிகமாக தழைச்சத்து யூரியா உரம் இடப்பட்ட பகுதிகளிலும் மிகுந்து காணப்படும்.

# பூச்சியின் விபரம்

- முட்டை: முட்டை தட்டையாக, முட்டை வடிவத்தில், மஞ்சளான வெள்ளை நிறத்தில் காணப்படும்
- புழு: புழு பச்சையான நிறத்தில் ஒளி கசியும் தன்மை கொண்டு விளங்கும். முன்மார்புக் கேடயம் நுனி நோக்கி நிமிர்ந்தும், பக்கவாட்டில் உருளையாகவும் காணப்படும்.
- அந்துப்பூச்சி: அந்துப் பூச்சியானது மஞ்சளான பழுப்பு நிற இறக்கைகளைக் கொண்டது. அதில் நிறைய கருப்பு அலை போன்ற கோடுகள் நடுவிலும், இறக்கைகளின் ஓரத்தில் கருப்புநிற பட்டையான கோடுடனும் காணப்படும்.





# ஒருங்கிணைந்த முறையில் இலைச்சுருட்டுப்புழு கட்டுப்பாட்டு முறைகள்




1. ஒரு ஏக்கருக்கு ஒரு விளக்குப்பொறி மாலை 6.30 மணி முதல் இரவு 8.00 மணி வரை ஒளிரவிட்டுத் தாய் அந்துப்பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம்.
2. இலை சுருட்டுப்புழு தாக்குதல் அதிகம் உள்ள வயல்களில் அதிக தலைச்சத்து உரம் இடக்கூடாது.
3. மூன்று அடி உயரம் கொண்ட குச்சிகளைப் பறவை இருக்கையாக அமைத்துப் பறவைகளைக் கவர்ந்து அவை தாய் அந்துப்பூச்சிகளை பிடிக்க வழிவகை செய்யலாம்.
4. பாதிப்பு பொருளாதார சேத நிலையை விட அதிகமாகும் பட்சத்தில்
   கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 50 எஸ்.பி 400 கிராம்
   புளுபெண்டியமைடு 39.35 எஸ்.சி 50 மிலி
   குளோரான்ட்டினிலிபுரோல் 18.5 SC 60 மி.லி

ஏதேனும் ஒரை மருந்தினில் 200 லிட்டர் நீரில் கலந்து கைத் தெளிப்பான் கொண்டு தெளித்து கட்டுப்படுத்திடலாம். இதன் மூலம் விவசாயிகளுக்கு மகசூல் இழப்பு ஏற்படுவது தவிர்க்கப்படுகிறது





# Contact Us


**முனைவர். வீ.சாதனா**
**உதவி பேராசிரியர் (பூச்சியியல்துறை)**

+91 8098438289

https://pushkaramagricollege.ac.in/

sadhanaveeramani@gmail.com

புஷ்கரம் வேளாண்மை அறிவியல் கல்லூரி, புதுக்கோட்டை- 622 303